செ.வெ.எண்: 39 நாள்: 20.04.2020

# பத்திரிக்கை செய்தி

கோவிட்–19 வைரஸ் நோய் தொற்று பரவுதலை தடுப்பதற்பாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து மருத்துவ சிகிச்சை மற்றும் மருத்துவ உதவிகள் (இதய நோய், சிறுநீரக நோய், காசநோய், பக்கவாதம், நுரையீரல் மற்றும் கல்லீரல் சம்பந்தமான நோய், புற்று நோய், நீரலிவு நோய், இரத்த அழுத்தம்) தேவைப்படும் மூத்த குடிமக்களின் பராமரிப்பாளர்களுக்கு பாஸ் வழங்கப்பட உள்ளது. எனவே கரூர் மாவட்டத்தில் மேற்படி பராமரிப்பாளர்களுக்கு பாஸ் பெற விரும்பும் மூத்த குடிமக்கள் தனது கோரிக்கைகளை கீழ்காணும் ஆவணங்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட சமூகநல அலுவலகத்தில் நேரில் சமர்ப்பிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.த.அன்பழகன் இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார். மேலும் சாதாரண காய்ச்சல், சளி, இருமல், மூச்சுத் திணறல் இருப்பின் முதியோருக்கான உதவி எண் (080461100007) மற்றும் அருகில் உள்ள அரசு மருத்துவமனையை அணுகுமாறு தெரிவித்துள்ளார் .

## பாஸ் பெற தேவைப்படும் ஆவணங்கள்

1.விண்ணப்பதாரரின் புகைப்படம் 2–நகல்

2.விண்ணப்பதாரரின் மருத்துவ ஆவணங்கள்

3.விண்ணபதாரரின் ஏதேனும் ஒரு அடையாள அட்டை

4.பாரமரிப்பாளரின் ஏதேனும் ஒரு அடையாள அட்டை

வெளியீடு: செய்தி மக்கள் தெடாடர்பு அலுவலர், கரூர்.